# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கியம்)

பகுதி : **தமிழர் வணிகம் - தொல்லியல் ஆய்வுகள் - கடற் பயணங்கள் தொடர்பான செய்திகள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# தமிழர் வணிகம் - தொல்லியல் ஆய்வுகள் - கடற் பயணங்கள் தொடர்பான செய்திகள்

## தொல்லியல் ஆய்வுகள்

- திருவண்ணாமலையில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற கல்வெட்டுகள், சங்ககால மன்னன் நன்னனையும், பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடிய மலைபடுகடாம் நூலையும் கூறுகின்றன.
- தொல்லியலை ஆங்கிலத்தில் ஆர்க்கியாலஜி என்று கூறுவர்.
- 1963 ல் பூம்புகார் அருகில் உள்ள கீழார்வெளி என்ற இடத்தில் ஆய்வின் போது கி.மு. 3 ஆம் நூற்றாண்டை சேர்ந்த கட்டட இடிபாடுகள் கண்டறியப்பட்டன.
- இவ்விடத்தில் செங்கற்களால் ஆன படகுத்துறை, அரை வட்ட வடிவ நீர்த்தேக்கம், புத்த விஹாரம், வெண்கலத்தாலான புத்தர் பாதம் ஆகியவை கண்டறியப்பட்டன.
- தருமபுரி, கரூர், மதுரை ஆகிய மாவட்டங்களில் கி.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் 1876, 2003 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்ட அகழாய்வு -களில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

## தமிழர் வணிகமும் - கடற்பயணமும்

- உள்நாட்டு வணிகத்தை விட அயல் நாட்டின் வணிகத்திலேயே வருவாய் மிகுதி.
- திரைகடல் ஓடியும் திரவியம் தேடு - ஔவையார்.
- யாதும் ஊரே ; யாவரும் கேளிர் - கணியன் பூங்குன்றனார் (புறநானூறு).
- முந்நீர் வழக்கம் மகடூஉ இல்லை - தொல்காப்பியம் தொல்காப்பியர்.
- பழந்தமிழர்கள் பொருள் ஈட்டுதலை தம் கடமையாகக் கருதினர்.
- தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்தில் பொருள்வயிற் பிரிவு, காலில் பிரிவு, கலத்தில் பிரிவு என இருவகைப்படும்.
- தமிழர்கள் ஏலம், இலவங்கம், இஞ்சியை மேற்கு ஆசிய நாடுகளுக்கு நல்ல விலைக்கு விற்றனர்.
- தமிழர் கிரேக்கர், உரோமானியர்களை யவனர் என்று அழைத்தனர்.
- மருத நில அரசனது கோட்டை கப்பலுக்கு உவமையாக புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது.
- **கடலை குறிக்கும் சொற்கள்**

  ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவை, புணரி

- **கப்பலை குறிக்கும் சொற்கள்**
  கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, தெப்பம், திமில், அம்பி, வங்கம், மிதவை, பஃறி, ஓடம்.
- உப்பங்கழிகளில் செல்லுத்துவது சிறிய படகு.
- கடலில் செல்லும் பெரிய கப்பல் நாவாய் எனப்படும்.
- அலைகளால் கப்பல் அசைவதை யானைகளுடன் ஒப்பிட்டு பட்டினபாலை கூறுகின்றது.
- கரிகாலனின் முன்னோர் காற்றின் போக்கினை அறிந்து கலம் செலுத்தினர் என புறநானூறு கூறுகிறது.
- சேர துறைமுகமான முசிறியில் சுள்ளி ஆற்றில் யவனர்கள் பொன்னை கொடுத்து மிளகை எடுத்த சென்றனர் என அகநானூறு கூறுகிறது.
- பாண்டிய நாட்டின் துறைமுகமான கொற்கையை பற்றி மதுரை காஞ்சியும், சிறுபாணாற்றுபடையும் கூறுகின்றது.
- கொற்கை துறைமுகத்தில் முத்துக் குளித்தல் சிறப்பாக நடந்தன என மார்கோபோலோ கூறியுள்ளார்.
- ஏற்றுமதி பொருள்களில் முத்தே முதலிடம் பெற்றது.
- “விளைந்து முதிர்ந்த விழுமுத்து” – மதுரைக்காஞ்சி.
- சோழ நாட்டின் துறைமுகம் காவிரிபூம்பட்டினம் ஆகும். இதனருகில் பட்டிணபாக்கம் என்ற ஊரில் வணிகர்களே பெரும்பாலும் இருந்தனர்.
- காவிரியின் நதிக்கரையில் வாழ்ந்த சோழ மக்கள் புது வெள்ளம் வரும் பொழுது புனல் விழா கொண்டாடினர்.
- காவிரிபூம்பட்டிணத்தில் சுங்கச் சாலையும், கலங்கரை விளக்கமும் இருந்தன.
- காவிரிபூம்பட்டிணத்திற்கு கடல் வழியே குதிரைகளும், தரை வழியே மிளகும் வந்தன.
- தமிழர்கள் ஏற்றுமதிப் பொருள்களை பற்றி பட்டினப்பாலையும், மதுரைக்காஞ்சியும் கூறுகின்றன.
- இரத்தினம், முத்து, வைரம், மிளகு, கருங்காலி, கருமருது, தேக்கு, சந்தனம், வெண்துகில், அரிசி, ஏலக்காய், இலவங்கப்பட்டை, இஞ்சி போன்றவை ஏற்றுமதி பொருள்களாகும்.
- தமிழர்கள் சீனத்துப் பட்டு மற்றும் சர்க்கரையை இறக்குமதி செய்தனர்.
- கரும்பு,அதியமானின் முன்னோர் காலத்தில் சீனாவிலிருந்து கொண்டு வந்து பயிரிடப்பட்டது.